முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1569

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**15.01.2024,**திங்கட்கிழமை

1. பரம ஆனந்த ஞான குருவே
பரம சித்தி தந்தருளும் தேவகுருவே
சரவணச்சுடரேற்றி அருளும் சற்குருவே
சண்முகனார் என் அவதாரமே ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் தை மாதம் முதல் நாள், 15.01.2024, திங்கட்கிழமை)
வரமென அரங்கன் உன் திருவடி பற்றி
வையகத்தில் ஞானம் பயில்பவர்க்கு
3. தருகின்றேன் ஜீவ முக்தி
தரணியில் இனி பிறவாத பெரும்பேறு
பேறுபெற்று உன்னருளால் உலகோர்
பிசகின்றி இந்த பூவுலகத்தை
4. ஞானலோகமாக்கி அவரவரும்
ஞானிகளாகும் வாய்ப்பு கலியில் உன்வழித் தந்துள்ளேன்
உள்ளபடி அரங்கன் உன்னை நாடி வந்து
உயர்வான ஞானம் பயின்று
5. அரங்கன் நீ தருகின்ற
அன்னதான வழிமுறையை
முறையாக உலகமெல்லாம் ஏற்று
முழுமைபட எங்கும் தர்ம பலம் பெருக்க
6. பெருக்கவே கலியினில் மாற்றம்
பிசகின்றி அரங்கன் உன் அவதாரமாக நடந்தேறும்
நடந்தேற அற்புதத்தை நாளும் நாளும்
நாட்டிடுவேன் அரங்கன் உன்பால் செய்துவர

7. வருகவே அரங்கன் அவதார நோக்கம்
வையகத்தில் வெற்றி கொள்ளும்
வல்லமையான ஞான ஆட்சிகளும்
ஞானிகள் ஆட்சியும் ஞானசித்தர் காலமும்
8. ஆறுமுக அரங்கன் உன் நோக்கத்தால் பூர்த்தியாகும்
ஆகவே உலகோர் நம்பிக்கையோடு வர
அற்புதம் கண்டு ஆற்றல்பட கலியினில் சிறப்பு காண்பர்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–